11662/2015

94

014825

சமூகநல ஆணையரகம்
06 MAY 20..
கிண்டி, சென்னை-32

கருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றி வரும் சத்துணவு அமைப்பாளர்களுக்கான கூடுதல் பொறுப்பு படியினை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4–2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.39

நாள் 30.04.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத சித்திரை 17

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண். 3, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி–2) துறை, நாள் 04.01.2010

மீண்டும் படிக்க:–

2. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.11662/ சஉதி–1/2015, நாள் 08.04.2015.

-------

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர்கள் அருகில் உள்ள பொறுப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்று பணியாற்றும் போது நாளொன்றுக்கு 2 ரூபாய் வீதம் கூடுதல் பணிப்படி வழங்கப்பட்டு வரும் தொகையை 10 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கூடுதல் பொறுப்புப் படியினை ₹10–லிருந்து நாளொன்றுக்கு ₹20 ஆக உயர்த்தி வழங்கலாம் எனவும், அவ்வாறு உயர்த்தி வழங்கப்படும் பட்சத்தில் ஜுன் 2015 முதல் நடப்பு நிதியாண்டில் கூடுதல் செலவினமாக ₹1.87 கோடி அரசுக்கு ஏற்படும் எனவும் தெரிவித்து இது குறித்து உரிய ஆணை வெளியிடுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்நேர்வில், 06.04.2015 மற்றும் 08.04.2015 ஆகிய தினங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தினைத் தொடர்ந்து, 13.04.2015 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு அமைச்சர் (ச.ந.(ம) ச.தி), மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வித் துறை) மற்றும் மாண்புமிகு அமைச்சர் (உயர் கல்வித் துறை) ஆகியோரது முன்னிலையில் சத்துணவு ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது இதர இனங்களுடன் சத்துணவு அமைப்பாளர்களுக்கு தற்போது கூடுதல் பொறுப்புப்படியாக நாளொன்றுக்கு ₹10 வழங்கப்படுவதை ₹20 ஆக உயர்த்தி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

104

4. சமூக நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அ... ஏற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் சத்து... அமைப்பாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கூடுதல் பொறுப்புப் படியினை, சிற... நிகழ்வாக, கூடுதல் பொறுப்பு வகிக்கும் மையம் ஒன்றுக்கு ₹10 –லிருந்து நாளொன்றுக்கு ₹20 ஆ... உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது. மேலும், சத்துணவு மையங்களின் செயல்பாட்டில் எவ்வித... தடங்கலும் ஏற்படாவண்ணம் பார்த்து கொள்வதற்கு ஏதுவாக போதிய பணியாளர்களை கூடுதல் பொறுப்பு வகிக்க பணியமர்த்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கள அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் இதற்காகும் செலவினத்தை நிதி ஒதுக்கீடு தலைப்பின் கீழ் கணக்கிட்டு செலவு செய்திடவும் தேவைப்படும் கூடுதல் நிதியினைப் பெறுவதற்கு உரிய கருத்துருவினை நிதித் துறைக்கு அனுப்புமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு முதன்மைச் செயலாள...

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை – 32.
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சமூக நல ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) (சமூக நல ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சந (ம) சதி) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
நிதித் (சமூக நலம்) துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
அவர்களின் தனி செயலர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.2/சந.7) துறை,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

165